

# VG BUSINESS MAGAZINE

FOR INTERNAL CIRCULATION ONLY

DEC - 2021




வேட்டுவக்கவுண்டர் என்பது நமது பெருமை

மாதம்
December - 2021

இதழ்
6

ஆசிரியர்
கவிதா வாழைபரமேஸ்வரன்

இணை ஆசிரியர்
Dr.வாழைபரமேஸ்வரன்

வடிவமைப்பு
கவிதா வாழைபரமேஸ்வரன்

MOBILE
90037 95243

EMAIL
vgbusinesstycoons@gmail.com

WEBSITE
vgtycoons.com

For Internal Circulation Only

பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே...

# முகப்புரை


நமது வேட்டுவக்கவுண்டர் சமுதாய முன்னேற்றத்திற்கு நமது ஒற்றுமை மிகப் பெரிய பங்காற்றுகிறது. இந்த தீபாவளிக்கு நமக்கு நாமே திட்டத்தின் ஒரு பகுதியாக தீபாவளி பரிசு போட்டியை அறிமுகப்படுத்தி அதன் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தியதன் மூலம் எண்ணற்ற சிறு வணிகர்கள் பயனடைந்துள்ளார்கள். இந்த தீபாவளிக்கு நமது சொந்தங்கள் பெரும்பான்மையோர் நமது சமுதாய வணிகர்களிடமே வணிகம் செய்து உள்ளார்கள். இதுபோல் நாம் ஒவொருவரும் இனி வரும் காலங்களிலும் நமது சமுதாய வணிகர்களிடமே பொருட்களை வாங்கும் பொழுது நமது சமுதாயம் மிகப்பெரிய வளர்ச்சியை அடையும் என்பது நிச்சயம். தீபாவளி பரிசுப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்ற உறவுகள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் ஒவ்வொருவரும் ஒன்றிணைவோம் ...

வணிகத்தில் மேம்படுவோம்...



**கவிதா வாழைபரமேஸ்வரன்**




தீபாவளி சிறப்பிதழ் மிக சிறப்பாக இருந்தது. ஆன்மீக கட்டுரை அனைவருக்கும் பயனுள்ளதாக இருந்தது. மேலும், தீபாவளிக்கே உரித்தான ஸ்வீட், பட்டாசு, புத்தாடைகள் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் பற்றிய கட்டுரைகள் நன்றாக இருந்தன. சலங்கை துரை அவர்களின் பேட்டி அருமை..

**-- A. சக்திவேல்**
**மாரப்பம்பாளையம் புதூர்**

உரிய நேரத்தில் பதிவிற்கு நன்றிங்க மேடம் உங்களுடைய சேவை நம் இனத்திற்கான கால்தடம். நன்றி, வாழ்த்துகள்

**-- துளசிமணி**
**ஈரோடு**

நமக்கு நாமே திட்டத்தை நமது சமுதாய மக்களிடம் அறிமுகப்படுத்தியதன் மூலம் எங்களைப் போன்ற சிறு வணிகர்களுக்கு பேருதவியாக இருந்தது. இந்த தீபாவளிக்கு நமது வேட்டுவக் கவுண்டர் சமுதாய உறவுகள் எங்களது கடைக்கு வந்து பொருட்களை வாங்கி சென்றனர். நன்றி

**-- திரு.பழனிச்சாமி**

I appreciate your hard work and dedication for VG BUSINESS MAGAZINE. it is very informative. you stand out from other women. keep up the good work!

**-- Dr. D. KANAKAPUSHPAM**

# கோவையில் ஒரு புது உதயம்




எந்த ஒரு நோய்க்குச் சிகிச்சை பெறச் சென்றாலும், முதலில் சில பொதுவான பரிசோதனைகளை மருத்துவர்கள் பரிந்துரை செய்வார்கள். இது மிக எளிய பரிசோதனைகள் தான் என்றாலும், இதன் முடிவை அலட்சியப்படுத்த முடியாது. நம் உடலில் மறைந்திருக்கும் நோய்களின் தன்மைகளை இந்த பரிசோதனைகள் மூலமே கண்டறிய இயலும். இத்தகைய பரிசோதனைகளின் முடிவுகள் மிகத் துல்லியமானதாக இருக்க வேண்டியது அவசியம்.

கடந்த 21.11.21 அன்று கோயம்புத்தூர் P.N.பாளையத்தில் புதிதாக அகம் டயாக்னாஸ்டிக்ஸ் என்னும் பெயரில் இரத்தப் பரிசோதனை நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் உரிமையாளர் திரு.உதயகுமார். கோபி, வெள்ளாங்கோவில் அருகிலுள்ள அத்திக்காடு இவரது பூர்வீகம். இவர் பட்டாளி வேட்டுவக்கவுண்டர் ஆவார். இவரது குல தெய்வம் கருப்பண்ணசாமி. இவரது பெற்றோர்கள் திரு.செங்கோட கவுண்டர்,திருமதி.சாந்தாமணி.



இவரது மனைவியின் பெயர் மலர்விழி. இவர்களுக்கு இரு குழந்தைகள் உள்ளனர். இவரது மனைவி கோவையிலுள்ள Food Corporation of India வில் தரக் கட்டுப்பாட்டாளராக பணிபுரிந்து வருகிறார். திரு. உதயகுமார் அவர்கள் சித்தோடு பாரதிதாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் B.sc Microbiology, DMLT படித்துள்ளார். படித்து முடித்த பின்னர் கோபியில் ஒரு சிறிய லேபில் ஒரு வருட காலம் 750 ரூபாய் சம்பளத்திற்கு பணி புரிந்துள்ளார். பின்னர் கோயம்புத்தூரில் உள்ள குப்புசாமி நாயுடு மருத்துவ மனையில் மூன்று வருடம் பணிபுரிந்துள்ளார். அதற்கு பிறகு மும்பையில் நான்கு வருடமும், துபாயில் சுமார் 11 வருட காலம் பணிபுரிந்துள்ளார். கடந்த மே மாதம் வரை துபாயில் பணிபுரிந்த இவர் கொரோனா பிரச்சனையினால் கோயம்புத்தூருக்கே திரும்பி வந்துள்ளார். இங்கு வந்த பிறகு தன் குடும்ப நண்பருடன் சேர்ந்து இரத்த பரிசோதனை மையத்தை துவங்கி நடத்தி வருகிறார். மதுரை மற்றும் திருச்சியில் அகம் டயக்னாஸ்டிக்ஸ் என்ற பெயரில் நண்பருடன் கூட்டு சேர்ந்து ஆரம்பித்த இவர்

தற்பொழுது கோயம்புத்தூரில் ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் தனியாக இரத்த பரிசோதனை மையத்தை துவங்கி உள்ளார். அகம் டயக்னாஸ்டிக்ஸின்

**நோக்கம் :**

நோயற்ற, ஆரோக்கியமான மனிதகுலத்தை உருவாக்குதல் மற்றும் அனைத்து முகங்களிலும் புன்னகை.

**குறிக்கோள் :**

அனைவருக்கும் மலிவு விலையில் சமீபத்திய தொழில்நுட்ப மருத்துவ பரிசோதனை வசதி. அனைத்து சோதனைகளுக்கும் ஒரே நாளில் அறிக்கை.

கடந்த 21.11.21 அன்று Dr.S. நடராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு லேபை திறந்து வைத்தார். தற்சமயம் 6 பேர் பணியில் உள்ளனர். இன்னும் கூடுதல் பணியாளர்கள் தேவைப் படுகின்றனர். நம்மினத்தை சேர்ந்த இளைஞர்கள் DMLT முடித்திருந்தால் அகம் டயக்னாஸ்டிக்ஸை தொடர்பு கொள்ளலாம். மேலும் நமது VG BUSINESS TYCOONS உறுப்பினர்களுக்கு சலுகை விலையில் பரிசோதனைகளை செய்து தருவதாக உதயகுமார் அவர்கள் உறுதியளித்துள்ளார்.














# புலிக்குத்தி வேட்டுவர்கள்

**வே**ட்டுவர் என்றாலே வீரம், தர்மம், நேர்மை, நியாயம் போன்ற அனைத்து நற்பண்புகளும் உடையவர்கள் என்று வரலாறு கூறுகிறது. அத்தகைய குறிஞ்சி நில மன்னர்களின் வம்சமான வேட்டுவ கவுண்டர்களின் வீர வரலாற்றைப் பார்க்கும் பொழுது நம்மை மிகவும் பிரமிக்க வைக்கின்றது.

குறிஞ்சி நிலமானது மலையும் மலை சார்ந்த நிலமாக இருந்த காரணத்தால், கால்நடை வளர்ப்புச் சமுதாயமே மேலோங்கி இருந்தது. கால்நடைகளே செல்வமாகக் கருதப்பட்ட காலங்களில், கால்நடைகளைக் காத்தல் பெரும்பணியாயிருந்தது. கால்நடைகளைக் கவர்வதிலும், அவற்றைக் காத்தலிலும் வீரர்கள் போரிடுதல் இயல்பான

சமூக நிகழ்வாயிருந்தது. அது போலவே, கால்நடைகளைக் காட்டு விலங்குகளினின்றும் காப்பதற்காகக் காவல் வீரர்கள் விலங்குகளோடு சண்டையிட்டு விலங்குளைக் கொல்லுதலும், சண்டையின் போது வீரர்கள் இறந்துபடுதலும் மிகுதியாக நிகழ்ந்தன. இவ்வகை வீரர்களுக்கு நடுகல் எடுத்து வழிபடுதல் மரபு ஆகும்.



தொல்காப்பியம் கூறும் குறுநில மன்னர்களான வேட்டுவர்கள் இன்றும் குறிஞ்சி நிலத்தில் ஆளுமையுடன் வாழ்ந்து கொண்டு உள்ளார்கள். பல நூறாண்டுக்கும் மேலாக தங்களின் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளாமல் ஒரே நிலையான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்ற தொன்மையான வரலாற்றைக் கொண்டவர்கள். இவர்கள் சந்தித்து வந்த எண்ணற்ற நல்ல விஷயங்கள் மற்றும் கடினமான விஷயங்கள் சங்க காலங்களில் தோன்றிய இலக்கியங்கள் தெளிவாக குறிப்பிடுகிறது. வேட்டுவ அரசர்களைப் பற்றியும் எண்ணற்ற ஆவணங்கள் உள்ளன. வேட்டுவர் என்றால் தலைவன், அரசன், பாதுகாவலன் என்று அர்த்தமாகும். வேட்டுவர்கள் அரசர்கள் என்பதால் இவர்கள் போர் திறமையை வளர்த்துக்

கொள்ள வேட்டையாடுதலை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதனை தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு போன்ற இலக்கியங்கள் மூலம் அறியலாம். இந்தப் போர்ப் பயிற்சியில் இவர்கள் வேட்டுவர் தர்மத்தை கடைபிடித்தனர்.


- **வேட்டுவர் போர் தர்மம்...**

  - *சூரிய அஸ்தமத்திற்குப் பின் ஆயுதப்பிரயோகம் செய்யக் கூடாது...*
  - *ஆயுதத்தை நழுவ விட்டவனைத் தாக்கக் கூடாது...*
  - *சரணடைந்தவனைத் தாக்கக் கூடாது...*
  - *புறமுதுகு காட்டி ஓடுபவனைத் தாக்கக் கூடாது...*
  - *பெண்கள், குழந்தைகள், பசுக்கள், சாதுக்கள் ஆகியோரைப் போரின் போது துன்புறுத்தக்கூட அனுமதிக்கக் கூடாது...*

என்கிற வேட்டுவர் போர் தர்மத்தை நமது முன்னோர்கள் கடைபிடித்து வந்துள்ளனர். வேட்டுவ மன்னர்கள் போர் பயிற்சிக்கு மட்டுமே வேட்டையாடுவார்கள். மேலும் போர் பயிற்சி செய்யும் பொழுது உணவிற்காகவோ பணத்திற்காகவோ வேட்டையாடியது இல்லை என்று பரணர்கள் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். அதேபோல் இளம் மற்றும் வயது முதிர்ந்த விலங்குகளை வேட்டையாட மாட்டார்கள்; கர்ப்பிணி விலங்குகளை வேட்டையாட மாட்டார்கள்; தூங்கிக்கொண்டு உள்ள விலங்குகளை கொலை செய்ய மாட்டார்கள்; இவர்கள் கொடிய விலங்குகளை மட்டுமே கண்டறிந்து அவற்றை வில்லு, அம்பு போன்ற போர் ஆயுதம் மூலம் வேட்டையாடினர். இவ்வாறு வேட்டையாடிய உணவுகளை பரிசாக மற்றவர்களுக்கு கொடுத்து வந்துள்ளனர். அதேபோல் வேட்டுவ அரசர்கள் போரில்

புறமுதுகு காட்டி கொள்வதை விரும்ப மாட்டார்கள். எதிரிகளை கண்டு அஞ்ச மாட்டார்கள். அவ்வாறு எதிரிகளிடம் போர் புரிந்து வெற்றி அடைந்த நாடுகளை புலவர்களுக்கு பரிசாக கொடுத்துள்ளார்கள். வல்வில் ஓரி, காரி உடன் போர் புரிந்து அந்த நாட்டை தமிழ் புலவர்களுக்கு கொடுத்துள்ளார். இத்தகைய பெருமை மிக்க வேட்டுவ மன்னர்கள் மக்களுக்கு எண்ணற்ற நன்மைகளை செய்துள்ளனர். அவற்றில் கோவில் கட்டுதல், குளம் வெட்டி கொடுத்தல், காவிரி கரைகளிலிருந்து கால்வாய்களை வெட்டி விவசாயம் செய்வதற்கு பொது மக்களுக்கு பயன்பட செய்தல் ஆகும். இதேபோல் எதிரி மன்னர்களிடம் திறமையாகவும் வலிமையாகவும்மதிநுட்பத்துடன் போர் புரிந்து உள்ளார்கள்.

மேலும் வேட்டுவ தலைவர்கள் கொடிய விலங்குகளிடமிருந்தும், திருடர்களிடமிருந்தும் ஊர் பொது மக்களை காப்பாற்றி உள்ளனர். இதுமட்டுமல்லாமல் வேட்டுவ தலைவர்கள் ஒவ்வொரு ஊர்களிலும் தங்கள் பகுதி மக்கள் மிகவும் பாதுகாப்பாக வாழ உறுதி செய்துள்ளனர். அதற்குச் சான்றாக இருப்பது புலிகுத்தி வீரன் நடுகற்கள்.





புலி என்ற வார்த்தையை கேட்டவுடன் எவ்வளவு பெரிய ஆளுமையானவர்களாக இருந்தாலும் அவர்களின் உள்ளத்தில் சிறிது பயம் வரும். அத்தகைய கொடும் புலியைக் குத்திக் கொன்ற வேட்டுவ கவுண்டர்கள் எவ்வளவு பெரிய வீரர்கள் என்பதை உணர முடியும். தான் வாழ்ந்த ஊரில் உள்ள பொது மக்களைக் காப்பதற்கு தன் உயிரையும் தியாகம் செய்த அவர்களின் தியாகத்தை நாம் எவ்வளவு போற்றினாலும் தகும்.

எண்ணற்ற காட்டு விலங்குகளை மிக எளிதாக தன் நண்பர்களாக மாற்றிக் கொண்ட வேட்டுவர்கள் குறிப்பாக யானை, குதிரை, நாய் போன்ற காட்டு விலங்குகளை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு அவைகளை மிகச் சிறப்பாக பயன்படுத்தி வந்தனர். மேலும் யானைப்படை, குதிரைப்படை போன்றவற்றை உருவாக்கி எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாக வாழ்ந்துள்ளனர்.

வேட்டுவக் கவுண்டர்கள் ஏன் புலியைக் குத்திக் கொன்றார்கள், அதற்கு ஏன் புலி குத்தி நடு கல் வைத்தார்கள் என்பதை பற்றி இப்பொழுது பார்ப்போம். சங்க இலக்கியங்களில் புலிகளுக்கு பல பெயர்களைக் கொண்டு குறிப்பிட்டுள்ளார்கள். பண்டைக் காலத்தில் புலிக்கு வியக்கரம், தீவி, சார்தூளம், வரி, உழுவை, வயமா, மிருகாதி, வல்லியம், சித்திரகாயம், தரக்கு எனப் பல பெயர்கள் வழங்கின என்று உரிமச்சொல் நிகண்டு காட்டுகிறது. வேங்கை என்ற சொல் வரிப்புலியை மட்டுமே குறிக்கும். சங்க இலக்கியத்தில் வேங்கை பற்றி பல குறிப்புகள் உண்டு. அதன் உறைவிடத்தைச் சில அகநானூற்று பாடல்கள் வர்ணிக்கின்றன:


'பனியிருஞ்சோலை' (அகம் 112), 'தேக்கமல் சோலை' (அகம் 251). இதில் சோலை என்ற சொல் மழைக்காட்டைக் குறிக்கிறது.

இத்தகைய புலிகள் வாழும் சரணாலயங்கள் களக்காடு, முண்டந்துறை, ஆனைமலை, முதுமலை சரணாலயம், சத்தியமங்கலம் காட்டுப் பகுதி, மேகமலை போன்றவையாகும். நீலகிரி, குற்றாலம், நாங்குநேரி போன்ற இடங்களிலும் ஆங்கிலேயர் காலத்தில் புலிகள் காணப்பட்டதாக வரலாறு குறிப்பிடுகிறது. இவைகளைக் கொண்டு புலிகள் நிறைந்து காணப்பட்ட இடம் வேட்டுவக் கவுண்டர்கள் வாழ்விடமாக கொண்டுள்ளார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ள முடிகிறது.



புலிகள் கூச்ச சுபாவம் கொண்டது. இவை சாதாரணமாக காடுகளை விட்டு வெளியே வராது. இவை காட்டு எருமை, மான், முயல், போன்றவற்றையும் தவளை, மீன், ஆமை போன்றவற்றையும் உண்ணும் குணமுடையது. இவை குறைந்தது 5 கிலோ முதல் 15 கிலோ வரை ஒரு முறை உணவாக எடுத்துக் கொள்ளும். இவை தான் வேட்டையாடிய மிருகம், ஒரு பெரிய மிருகமாக இருந்தால் அதை மறைத்து வைத்துக் கொண்டு ஒரு வாரம் வரை உண்ணக் கூடிய தன்மையுடையது. வேங்கையின் காலடி தடத்தை கொண்டு அதன் எடை வயது மற்றும் ஆண் அல்லது பெண் போன்றவற்றை நாம் தெரிந்து கொள்ள முடியும். நமது கை ரேகையை போன்று புலியின் உடம்பில் உள்ள வரிகள் ஒவ்வொரு புலிக்கும் ஒரு வித தனித்தன்மையுடன் இருக்கும். ஒரே மாதிரியான வரிகளைக் கொண்ட இரண்டு புலிகளை நாம் காண முடியாது.

இதன் நாக்கில் முட்கள் போன்ற அமைப்பனது உணவை உண்ணும் பொழுது இரையின் உடம்பில் உள்ள கடினமான தசைகளையும் தோல்களையும் கிழித்து உண்பதற்கு எளிதாக உள்ளது. இதன் நகம் மிக கூர்மையாகவும் வளைந்து ஏர் போன்ற அமைப்பை உடையதாக இருக்கும். இதைக் கொண்டு எதிரியின் உடலில் வேகமாக அடித்து ஏர் உழுவது போல் சதைகளை கிழித்து காயப்படுத்தும். அதனால் இதை உலுவை என்ற பெயராலும் சங்க காலங்களில் இருந்து அழைக்கின்றனர்.



இத்தகைய கொடிய புலியானது வயது, பசி மற்றும் காடுகளை அழித்தல் போன்றவற்றின் காரணமாக காட்டுக்குள் இருந்து மக்கள் வாழும் பகுதிகளுக்கு வந்து ஆடு, மாடு, மனிதர்கள் போன்றவற்றை வேட்டையாடி உண்ணும் குணமுடையது. மேலும் புலி வேட்டையாடும் பொழுது பதுங்கி பின்புறமாக வந்து தாக்கும் குணம் உடையது. அதனால் புலியை எளிதில் விரட்டி அடிப்பது அல்லது கொன்று விடுவது கடினம். எனவே மிகவும் திறமையான, உடல் வலிமை மிக்க, மதிநுட்பம் உடைய, தியாக உணர்வு உள்ள தலைவர்களான வேட்டுவ கவுண்டர்கள் மட்டுமே புலியை அடக்க முடிந்தது. புலி தன் இரையை தாக்கும் போது தன் முன்னங்கால்கள் மூலம் மிகவும் பலமாக தாக்கும். தன் கூர்மையான ஏர் கலப்பை போன்ற நகத்தால் சதையை கிழித்து காயப்படுத்தும். புலியை கொல்வது என்பது மிகவும் சிரமம். கத்தியால் புலியின் இதயத்தை குத்தினால் மட்டுமே அது இறக்கும் என்ற நிலையில் வேட்டுவக் கவுண்டர்களால் மட்டுமே இதைச் செய்ய முடிந்தது. மேலும் புலி தன் முதுகில் அடித்து விடாமலும், இவர்களும் புலியின் முதுகில் அடிக்காமலும் நேருக்கு நேர் மோதி புலியின் இதயத்தில் கத்தியால் குத்திக் கொன்றனர். புலி தாக்கியதால் தன் இதயம் கிழிந்து ரத்தம் வடிந்து இறந்தனர். இதனாலேயே எவ்வளவோ வீரச்செயல்கள் செய்தவர்கள் இருப்பினும் புலியைக் குத்திக் கொன்று தன்னுயிரை ஈந்த புலிக்குத்தி வீரர்களுக்கு நடுகற்கள் நட்டு தெய்வமாக அந்த ஊர் மக்கள் வழிபட்டு வருகின்றனர்.



புலிக்குத்தி வீரர்களாலேயே ஊர் மக்கள் பாதுகாக்கப்பட்டனர். அந்த ஊரில் உள்ள விலங்குகளும், மாடுகளும், ஆடுகளும் பாதுகாக்கப்பட்டது. புலியுடன் சண்டையிட்டு உயிர்விடும் போதும் தன் போர் தர்மமான வேட்டுவர் தர்மத்தை மதித்து புலியைக் கூட நேருக்கு நேர் மோதி இதயத்தில் தான் குத்தினார்கள். உயிர் தியாகம் செய்த புலிகுத்தி வீரர்களை கடவுளாக கருதி வழிபட்டு வருகிறார்கள்.

குறிஞ்சி நிலத்தில் எண்ணற்ற புலிக்குத்தி கற்கள் இன்றும் நமக்கு வரலாற்று சான்றுகளாக உள்ளன. இத்தகைய சிறப்பு வாய்ந்த வேட்டுவர் இனத்தின் புலிக்குத்தி வீரர்களை போற்றுவதில் நாம் மிகவும் பெருமைப்படுகிறோம்.


**கட்டுரையாளர்**



Dr. D. Valai Parameswaran, MD,
PGCIH,FICM,PGDEM,DFID,PGDIP.Endo(UK)
Six Sigma & Green Belt Certificate Holder


நன்றி : தொல்குடி வேட்டுவர் சமூக ஆவணங்கள்



# நீங்களும் தொழில் முனைவோர் ஆகலாம்

## (Be An Entrepreneur)

நான் ஏன் தொழில் முனைவோர் ஆக வேண்டும்...?

நான் எப்படி தொழில்முனைவோர் ஆவது...?

நான் எப்படி சிறந்த தொழிலை தேர்ந்தெடுப்பது...?

நான் எப்படி முதலீடு செய்வது...?

நான் எப்படி வணிகத்தை கட்டமைப்பது...?

நான் எப்படி வணிக வசதிகளை பெறுவது ...?

நான் எப்படி சந்தைப்படுத்துவது...?

நான் எப்படி விற்பனை செய்வது...?

நான் எப்படி தொழிலில் லாபம் சம்பாதிப்பது...?

நான் எப்படி மனிதவளத்தை கையாள்வது...?

நான் எப்படி தொழிலில் சாதனைகள் செய்வது...?

நான் எப்படி மிகச் சிறந்த தொழில் முனைவோராக வருவது...?

போன்ற எண்ணற்ற பல்வேறு கேள்விகளுக்கும்...

இங்கு நான் கூறாத மேலும் பல கேள்விகளுக்கும்...

பதில் இருந்தால் மிகச் சிறப்பாக இருக்கும் இல்லையா...?

உங்களது அனைத்து கேள்விகளுக்கான பதிலே இந்த தொடர்...

## நீங்களும் தொழில் முனைவோர் ஆகலாம் (Be An Entrepreneur)

இத்தொடரின் முதல் அத்தியாயத்தில் நாம் ஏன் சொந்தமாக தொழில் செய்ய வேண்டும் என்பதற்கு ஐம்பது காரணங்களை கூறுகின்றேன். இதில் குறைந்தது 5 காரணங்களாவது உங்களுக்கு பொருந்தி இருந்தால் நீங்கள் தொழில்முனைவோராக வருவதற்கு தகுதியுடையவர்...

**பார்க்கலாமா...**

1. விருப்பம் போல வேலை செய்யலாம்...

*நீங்கள் விரும்பும் நேரத்தில் எப்படி வேண்டுமானாலும் வேலை செய்யலாம்*

2. நேரத்தை உனதாக்கலாம்...

*நீங்கள் விரும்பும் நேரத்தில் அதிக நேரம் உங்கள் குடும்பம் / குழந்தைகள் / நண்பர்களுக்கு ஒதுக்க முடியும். அதே நேரத்தில் உங்களது நேரத்தை உங்களது வணிகத்திலும் மிகச்சிறந்த நேரத்தை ஒதுக்க முடியும்...*

3. விதிகள் கிடையாது...

*உங்கள் வணிகத்திற்கு மற்றவர்களின் விதிமுறைகள் இல்லை. நீங்களே சிறந்த மேம்பட்ட விதிமுறைகளை வகுத்து அதன்படி செயல்படலாம்...*

4. எல்லைகளை நீங்களே வரையறை செய்யலாம்...

*உங்களின் வணிகத்திற்கு எந்தவிதமான எல்லைகளும் கிடையாது, அதை நிர்ணயிப்பவர் நீங்கள் மட்டுமே...*

5. விரும்பும் வணிகம் செய்யலாம்...

*நீங்கள் விரும்பும் வகையில் வணிகம் செய்யலாம், அது உற்பத்தி துறையோ, விற்பனை துறையோ அல்லது சேவை துறையோ எதுவாகினும் அது உங்கள் விருப்பமே...*

6. உங்களின் சூழலை நீங்களே வடிவமைக்கலாம்...

*உங்களின் வணிகச் சூழலை நீங்கள் விரும்பும் வண்ணம் அழகாக, நீங்கள் விரும்பும் வண்ணம் எளிதாக வும் வடிவமைக்கலாம்...*

7. உங்களின் வேட்கையை தொடரலாம்...

*ஒவ்வொருவருக்கும் விருப்பத்தை தாண்டிய வேட்கை (Passion) இருக்கும். உங்களின் வேட்கையை நீங்கள் விரும்புவது போலவும், தொழில்முனைவோராகவும் தொடரமுடியும்...*

8. எதுவாகினும் முதலிலிருந்து தொடங்கலாம்...

*எந்தவித வணிகமாக இருந்தாலும் அதனுடைய வளர்ச்சியை பூஜ்ஜியத்தில் இருந்து தொடங்க முடியும்...*

9. புதிய புதிய மனிதர்களை சந்திக்கலாம்...

*தொழில்முனைவோருக்கு தினமும் புதிய புதிய மனிதர்களை சந்திக்கும் வாய்ப்பு தானாகவே ஏற்படும் அல்லது நாள்தோறும் நாமே ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும்...*

10. புதிய அணியை கட்டமைக்கலாம்...

*நீங்கள் விரும்பும் வண்ணம் உங்களது வணிக அணியை (*Business Team) *கட்டமைக்கலாம்...*

11. புதிய வேலை வாய்ப்பை உருவாக்கலாம்...

*நீங்கள் விரும்பும் வண்ணம் எத்தனை பேருக்கு வேண்டுமானாலும், எந்த மாதிரியான வேலை வாய்ப்பையும் உருவாக்க முடியும்...*

12. மக்களுக்கு உதவி செய்யலாம்...

*உங்களது வணிகத்தின் மூலமாக புதிய புதிய பொருட்களை சந்தையில் சந்தை படுத்தலாம் அல்லது உற்பத்தி செய்யலாம் விற்பனை செய்யலாம் புதிய புதிய சேவைகளின் மூலமாக மக்களின் சிரமங்களை போக்கும் வகையில் உதவி செய்யலாம்...*

13. நிபுணத்துவம் பெறலாம்...

*உங்களுக்கு விருப்பமான துறையில் வணிகம் செய்யும்போது அதில் உங்களின் அனுபவங்களும் சாதனைகளும் உங்களுக்கு ஒரு நிபுணத்துவம் கிடைக்க செய்யும்...*

14. மிகப்பெரிய இலாபம் ஈட்டலாம்...

*நீங்கள் விரும்பும் வண்ணம் அதேசமயம் நீங்கள் வணிகத்தில் கொடுக்கும் உழைப்பிற்கு ஏற்ப அதிக அளவு இலாபம் ஈட்டலாம், அதன் மூலம் உங்களது வருவாயை யும் பெருக்க முடியும்...*

15. உங்களின் திறனை நீங்களே கண்டறியலாம்...

*புதிய புதிய வணிக வாய்ப்புகளை தேடும்போது, புதிய புதிய யுக்திகள் மற்றும் உங்களது சிறந்த ஆளுமையை நீங்களே கண்டுணரலாம்...*

16. பொருளாதார சுதந்திரம்...

*உங்களின் பொருளாதார அளவீட்டை நீங்களே முடிவு செய்யும் சுதந்திரம் தொழில்முனைவோருக்கு உண்டு...*

17. வரி ஆதாயங்களை பெறலாம்...

*வரவு செலவு கணக்குகளை சரியாக கையாண்டு அரசாங்கம் வழங்கும் சரியான வரி ஆதாயங்களை நீங்கள் பெறமுடியும்...*

18. புதிய புதிய சவால்கள் தினமும்...

*தொழில் முனைவோருக்கு புதிய புதிய சவால்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதத்திலும் ஒவ்வொரு பகுதியிலும் இருந்து பெறமுடியும், சவால்களை எதிர்கொண்டு சாதிக்க வும் முடியும்...*

19. புதிய கலாச்சாரங்களை அறிய வாய்ப்பு...

*தொழில்முனைவோருக்கு தொழில் நிமித்தமாக பல்வேறு ஊர்/ நாடு / பகுதிகளுக்குச் செல்லவும், புதிய புதிய கலாசாரங்களை கண்டு உணரவும் வாய்ப்பு உள்ளது...*

20. புதிய துறைகளை கண்டறிவது...

*வணிகம் செய்யும் பொருட்டு தொழில் முனைவோருக்கு புதிய புதிய வணிக வாய்ப்பு, புதிய புதிய துறைகளை கண்டறிவதற்கும் மிகச் சிறந்த வாய்ப்பு...*

21. உங்களின் சொத்துக்களை நீங்களே உருவாக்கலாம்...

*இருக்கும் சொத்துக்களை பாதுகாக்கவும், மேம்படுத்தவும், புதியபுதிய சொத்துக்களை வாங்கவும் தொழில்முனைவோருக்கு தங்களது தோழிலின் மூலமாக மிகச்சிறந்த வாய்ப்பு...*

22. புதிய வாடிக்கையாளர்களுடன் தொடர்பு...

*புதிய புதிய மற்றும் நல்ல நல்ல வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தொடர்பு மிக எளிதாக தொழில்முனைவோருக்கு கிடைக்கிறது. இன்று தொடர்பு தொடர்பு கொள்ளலே வணிகம்... தொடர்ப்பாற்றலே மிகப்பெரிய வணிக வாய்ப்பாக உள்ளது...*

23. பிடிக்காத செயலை பிறரைக் கொண்டு செய்யலாம்...

*ஒரு சில வேலைகள் உங்களுக்கு பிடிக்காமல் இருந்தாலும், அதனை உங்கள் பணியாட்கள் / உதவியாளர்கள் கொண்டு எளிதாக செய்து முடிக்கலாம்...*

24. பிடிக்கவில்லை என்றால் நிறுத்திவிடலாம்...

*ஒரு வேலை அல்லது செயல் உங்களுக்கு பிடிக்கவில்லை என்றால் அதனை நிறுத்திவிடலாம்... வேறு வேலை கூட செய்யலாம்...*

25. கொடுக்கும் திறன் மற்றும் அதிகாரம்...

*நல்ல செயல்களுக்காக பணமோ / நேரமோ / செலவிடும் திறன் மற்றும் அதிகாரம் தொழில்முனைவோருக்கு கிடைத்த வரப்பிரசாதம்...*

26. சமூகத்துடன் இணைந்திருப்பது…

*தொழில் செய்வதன் மூலம் தொழில்முனைவோர் சமூக குழுக்கள் மற்றும் சமுதாயத்தோடு மிக எளிதாக இணைந்திருக்கலாம்…*

27. தொழில் முன்னேற்றம்…

*உங்களது தொழிலை முன்னேற்ற, முன்னேற்றத்தை நோக்கி பல புதுமைகளின் மூலம் முன்னெடுக்கலாம்…*

28. ஆலோசகர்களை கண்டறியலாம்…

*தகுதி மற்றும் திறமை வாய்ந்த மிகச்சரியான ஆலோசகர்களை கண்டறியலாம், அதன் மூலம் வணிகத்திலும் வாழ்விலும் மேம்படலாம்…*

29. நீங்களே ஆலோசகர்களாக செயல்படலாம்…

*நீங்கள் உங்கள் வணிகத்தின் நிபுணத்துவம் பெறும்போது நீங்களே ஒரு மிகச் சிறந்த வழிகாட்டியாகவும், சமுதாயத்தில் மிகச் சிறந்த ஆலோசகராகவும் பரிணாமம் பெற முடியும்…*

30. புதிய புதிய திறன்களை கற்கலாம்…

*தொழில்முனைவோராக இருப்போர் இன்று பல்வேறு வழிகளில் மென்திறன், வாழ்வியல் திறன், வணிகத் திறன் என பல்வேறு திறன்களை புதியதாக கற்கவும், நிபுணத்துவம் பெறவும் வாய்ப்பாக உள்ளது…*

31. பயிற்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு…

*பல்வேறு வணிக திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகள், கருத்தரங்கம், வணிக கூட்டங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எளிமையாகக் கிடைக்கும்…*

32. பெரிய அலுவலகம் அமைக்கலாம்…

*நீங்கள் விருப்பப்பட்டால் நீங்கள் விரும்பும் அளவு வணிக அலுவலகம் / பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடம் / விற்பனை மையம் அமைக்க முடியும்…*

33. எங்கிருந்து வேண்டுமானாலும் பணிபுரியலாம்…

*இந்த நவீன உலகில் தற்போது தொழில் முனைவோர்கள் எங்கிருந்து வேண்டுமானாலும் அலுவலகம், தொழிற்கூடம், விற்பனை மையம், சேவை மையம் போன்றவற்றை மிக எளிதாக கணினி மற்றும் இணைய வழியில் இயக்க முடியும்…*

34. பல தொழில் புரியலாம்…

*தொழில்முனைவோர்கள் இன்று ஒரு தொழில் மட்டுமல்லாமல் பல்வேறு வகையான தொழில்கள் வணிக பணிகளை நிறுவி இயக்க முடியும்…*

35. தொழிலதிபர் அனுபவம்...

*தொழில் முனைவோர் மற்ற வேறு பணிகளை விட வணிகத்தில் மிகப்பெரிய அனுபவங்களைப் பெற இயலும்...*

36. சமூக அங்கீகாரம்...

*தொழில் முனைவோர்களுக்கு சமுதாயத்தில் தற்போது மிகப்பெரிய அங்கீகாரங்கள் கிடைக்கிறது, எனவே நீங்களும் மிகச் சிறந்த முறையில் வணிகத்தை அல்லது தொழிலை மேற்கொண்டால் உங்களுக்கும் மிகச் சிறந்த அங்கீகாரம் சமூகம் நிச்சயமாக வழங்கும்...*

37. வேகமாகச் செய்ய இயலும்...

*எந்த ஒரு வேலையையும் மிகவும் வேகமாகவும், நேர்த்தியாகவும் ஒரு பண்பட்ட தொழில்முனைவோர் நிச்சயமாகச் செய்ய முடியும். ஏனெனில் அவருக்கு அந்த அனுபவம் ஒவ்வொரு செயலிலும் கிடைத்திருக்கும்...*

38. தனிப்பட்ட அடையாளம்...

*ஒவ்வொரு தொழில் முனைவோருக்கும் அவர்தம் திறமைக்கேற்ப வணிக அடையாளம் நிச்சயமாக இந்த வணிக உலகம் வழங்கும்...*

39. புதுமைகளை படைத்தவராக...

*இன்று தொழில் முனைவோர்கள் பலர் தங்களுடைய ஒவ்வொரு வணிக செயல்பாடுகளிலும் புதுமையை படைத்தவர்களாக பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு கொடுப்பவர்களாக இன்று விளங்குகிறார்கள். அதில் நீங்களும் இணைந்து கொள்ளலாம்...*

40. மற்றவர்களுக்கு முன் உதாரணமாக...

*தொழில் முனைவோர் அனைவரும் சமுதாயத்தில் இன்று எதிர்வரும் இளைய தலைமுறைக்கு முன்னுதாரணமாக விளங்க முடியும். உங்களது சாதனைகளையும் / உங்களது உழைப்பையும் இனி வரும் சமுதாயம் முன்னுதாரணமாக எடுத்து அவர்களும் இந்த உலகில் நிறையச் சாதிக்க ஒரு வாய்ப்பாக அமையும்...*

41. வீட்டிற்கு அருகிலேயே...

*நீங்கள் உங்கள் அலுவலகப் பணியை வீட்டிலேயே அல்லது உங்கள் வீட்டிற்கு அருகிலேயே அல்லது உங்கள் வீட்டை தொழில்புரியும் இடத்திற்கு அருகிலேயே நீங்கள் விரும்பினால் அமைத்துக் கொள்ள முடியும்...*

42. வேலை உத்திரவாதம் பற்றிய கவலை வேண்டாம்...

*சொந்தமாக தொழில் புரிபவர்கள் தங்களது வேலைவாய்ப்பு உத்திரவாதம் பற்றிய கவலைஇல்லாமல் தொழில் புரியலாம்...*

43. பெருமையும் மன நிறைவும்…

*தொழில் முனைவோர் அனைவரும் பெருமையும் தொழில் வாய்ப்பின் மூலம் நல்ல மனநிறைவையும் எளிதாகப் பெறலாம்…*

44. உங்களின் கனவுகளை நனவாக்க…

*தொழில் முனைவோர் தங்களது கனவுகளை எளிதாக தனிப்பட்ட ஒவ்வொரு கனவையும் தங்களுடைய வணிகச் செயலின் மூலமாக நனவாக்க முடியும்…*

45. தோல்வியிலும் பாடம் கற்கலாம்…

*தொழில்முனைவோர் தொழிலில் தோல்வியடைந்தால் கூட அதன் மூலம் புதியபுதிய திறன் வளர்த்து அனுபவப் பாடம் கற்க முடியும், மீண்டும் புதியதாக வெற்றி பெறவும் முடியும்…*

46. உங்கள் வாழ்க்கையே மற்றவருக்கு பாடம்…

*ஒவ்வொரு தொழில் முனைவோரும் மற்றவர்களுக்கு ஒரு பாடமாகவும் முன் உதாரண மனிதர்களாகவும் இருக்கமுடியும்…*

47. உங்கள் குழந்தைகளுக்காக / சந்ததியினருக்கான…

*உங்களின் ஒவ்வொரு தொழில் வணிக முன்னெடுப்புகள் அனைத்தும், எதிர் காலத்தில் உங்களது குடும்பம், குழந்தைகள் / சந்ததியினருக்கும் பயனளிக்கும்…*

48. வசதி வாய்ப்புகளை பயன்படுத்தலாம்…

*தற்போதைய இணைய வசதி தொழில்நுட்ப வசதி, வங்கி வசதி, அரசாங்க உதவிகளை எளிதாகப் பெற்று மிகச் சிறந்த தொழில் முனைவோர் ஆகலாம்…*

49. யாரும் உங்களைத் தடைபோட முடியாது…

*நியாயமான நேர்மையான தொழில் செய்யும் போது யாரும் எங்கேயும் உங்களுக்குத் தடை போட்டு விட முடியாது உங்களது வளர்ச்சியை உங்களைத் தவிர வேறு யாரும் தடுக்க முடியாது.*

50. உலகையே மாற்றும் வாய்ப்பு…

*ஒரு சிறு யோசனை, ஒரு சிறு கண்டுபிடிப்பு, ஒரு சிறு புதுமை இந்த உலகையே மாற்றும் சக்தி கொண்டது. உங்களின் சிறு யோசனை, உங்களின் கனவு, உங்களின் உழைப்பு, உங்களின் புதுமை போன்றவை புதிய உலகம் படைக்கட்டும்…*



நன்றி வணக்கம்…

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்…

**கே. வி. இரமேஷ்**
**வணிக மேம்பாட்டு ஆலோசகர்**
**மனித வள மேம்பாட்டுப் பயிற்சியாளர் மற்றும் ஆராய்ச்சியாளர்**



## அடுத்த இதழில்...

## உழவர் திருநாள் சிறப்பிதழ்

VettuvarTV
VettuvarTV
https://youtube.com/c/VettuvarTV

VG BUSINESS Tycoons
9003795243
VG HELP LINE



# மழை நீரை சேமிப்போம்